அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 30/96

எனது இல. 11/2/3/9(எச்) பொது 51
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 7
1996.10.14

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு வெளியால் ஆட்சேர்ப்புச்
செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 55
வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்குதல்.

---

அரசாங்க சேவைக்கு அமய அல்லது தற்காலிக அல்லது விசேட கடமை
களைச் செய்வதற்கான அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சில உத்தி
யோகத்தர்களுக்கு விசேட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலமாகவும் நிருவாகத்
தீர்மானத்தின் மூலமாக பதவி நிரந்தரமாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்
பட்டுள்ளன.

02. மேலே குறிப்பிட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பதவியில் உறுதிப்
படுத்தப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரின் மட்டிலும் அவர்கள் ஆட்சேர்ப்புச்
செய்யப்பட்ட வேளையில் அச்சேவைகளுக்கான அவ்வேளையில் நடைமுறையிலுள்ள நியதி
களின்படி வேண்டப்பட்ட கல்வி அல்லது வேறு தகைமைகளைக் கொண்டிராத உத்தியோ
கத்தர்கள் ஓய்வில் செல்வதற்கான விருப்புத் தெரிவு வயதெல்லையான 55- வயதுக்கு-
மேல் சேவை நீடிப்புப் பெறுவதற்கு தகுதியற்றவராவர்.

03. எவ்வாறாயினும் இவ்வகுதியின் கீழ்வரும் எவரேனும் ஒருவர் ஓய்வூதியக் குறிப்
பின்படி பத்து ஆண்டுகள் சேவையைப் பூர்த்தியாக்காது ஓய்வூதியம் பெறும் உரிமைக்கு
தகுதியற்றவராயிருந்தவிடத்து பொருத்தமான அதிகாரியின் அங்கீகாரத்துடன் ஆகக்
குறைந்தளவு காலத்துக்கான சேவை நீடிப்பு வழங்கப்படலாம்.

04. இவ்வகுதியின் கீழ் உமது அமைச்சில்/திணைக்களத்தில் சேவையாற்றும் உத்தி
யோகத்தரின்/பணியாளின் சொந்த விபரங்கள் எல்லாவற்றையும் கொண்டதான ஓர்
பதிவேடு முறையே அமைச்சிலும் அதே வேளையில் திணைக்களத்திலும் பேணப்பட
வேண்டும். இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்துரைகள் இவ்வகுதியின் கீழான உத்தியோகத்
தர்கள் ஓய்வில் செல்வதற்கான விருப்புத் தெரிவு வயதை அடையும் வேளையில் அனு
சரிக்க வேண்டியதுடன் பதிவேடு அதன்படி நாளதுவரைப்படுத்தப்படவும் வேண்டும்.

ஒப்பம்! ஆர். எஸ். ஜயரட்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.